# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## *2018 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, கடை, அலுவலக ஊழியர் (ஊழியத்தையும் வேதனத்தையும் ஒழுங்குபடுத்தல்) (திருத்தச்) சட்டம்*

---

*(2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 18 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2018, யூன் மாதம் 22 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

---

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**2018 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, கடை, அலுவலக ஊழியர் (ஊழியத்தையும் வேதனத்தையும் ஒழுங்கு படுத்தல்) (திருத்தச்) சட்டம்**

[*2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 18 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ. - ஓ. 29/2009*

***(129 ஆம் அத்தியாயமான) கடை, அலுவலக ஊழியர் (ஊழியத்தையும் வேதனத்தையும் ஒழுங்குபடுத்தல்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்***

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டம், 2018 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, கடை, அலுவலக ஊழியர் (ஊழியத்தையும் வேதனத்தையும் ஒழுங்குபடுத்தல்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*சுருக்கப் பெயர்*

**2.** (129 ஆம் அத்தியாயமான) கடை, அலுவலக ஊழியர் (ஊழியத்தையும் வேதனத்தையும் ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் 18ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

*அத்தியாயம் 129 இன் 18ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

(1) அதன் 18ஆ எனும் பிரிவில் -

(அ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவினை இடுவதன் மூலமும் :-

"(2) இப்பாகமானது ஏற்புடையதாகும் ஒரு பெண் ஊழியர், அவர் மகப்பேற்று நிலை எய்தியிருந்தால் -

(அ) அவருக்கு மகப்பேற்றின் விளைவாக உயிருள்ள குழந்தை ஒன்று கிடைக்குமானால் அவரது மகப்பேற்று தேதியன்று தொடங்கி எழுபது நாட்களுக்கு ; அத்துடன்

(ஆ) மகப்பேற்றில் உயிருள்ள குழந்தை, கிடைக்கவில்லையாயின் அவரது மகப்பேற்று தேதியன்று தொடங்கி இருபத்தியெட்டு நாட்களுக்கு,

எனும் காலப்பகுதிக்கு லீவு பெறுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும் என்பதுடன் தொழில்தருநர் அத்தகைய லீவை அனுமதித் தலும் வேண்டும்.";

(ஆ) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவினை நீக்குவதன் மூலமும்.

(2) பிரிவு 18ஏ இனை உடனடுத்து 18ஐ எனும் பின்வரும் பிரிவைச் சேர்ப்பதன்மூலமும் :-

"தாய்ப்பால் ஊட்டும் தாய்மார் களுக்கான தாய்ப்பால் ஊட்டுவதற் கான கால இடை வெளிகளை ஏற்பாடு செய்தல்.

18ஐ. ஏதேனும் கடை அல்லது காரியாலயத்தில் பெண் ஊழியர் ஒருவரின் தொழில்தருநர் ஒரு வயதிற்கு கீழ்ப்பட்ட குழுந்தை ஒன்றிற்கு அவள் தாய்ப்பால் ஊட்டுவதாயின், ஏதேனும் ஒன்பது மணித்தியால காலப்பகுதியில், அவள் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய நேரங்களில் இரண்டு தாய்ப்பால் ஊட்டும் கால இடைவெளி களை அவளுக்கு அனுமதித்தல் வேண்டும். ஒவ்வொரு கால இடை வெளியும், ஒரு குழந்தைப் பராமரிப்பு நிலையம் அல்லது வேறு பொருத்த மான இடம் அத்தகைய குழந்தைக்கு தாய்ப்பால் ஊட்டுவதற்காக அத்தகைய பெண் ஊழியருக்கு அத்தகைய தொழில்தருநரால் வழங்கப்பட்டி ருக்குமிடத்து, முப்பது நிமிடங்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும் என்பதுடன், குழந்தைப் பராமரிப்பு நிலையம் அல்லது வேறு பொருத்த மான இடம் எதுவும் அவ்வாறு வழங்கப்பட்டிருக்காவிடத்து, ஒரு மணித்தியாலத்திற்குக் குறையாமல்

இருத்தல் வேண்டும்; அத்துடன் ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் உணவுக்காக அல்லது ஓய்விற்காக அத்தகைய பெண் ஊழியருக்கு வழங்கப்பட்ட கால இடைவெளிக்கு மேலதிகமாக இருத்தல் வேண்டும் என்பதுடன், அவளது தொழில் நோக்கங்களுக்காக, எந்த காலப் பகுதியின்போது அவள் அவளுடைய தொழிலில் தொழில் புரிந்துள்ளாளோ அந்த காலப் பகுதியாக கருதப்படுதலும் வேண்டும்.”.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**3**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*